

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 195 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 13 – புதன்கிழமை 25 பிப்ரவரி 2026 – சென்னை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 195 : Thiruvalluvar Year - 2057 - Maasi 13 - Wednesday 25 February 2026 - Chennai 28 Pages ₹ 5.00





தொழில் துறையில் சரித்திரச் சாதனை !

5 ஆண்டுகளில் 1,179 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

ரூ. 12.37 இலட்சம் கோடி முதலீடு

36 இலட்சம் வேலைவாய்ப்புகள்

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் !!



வெல்வோம் ஒன்றாக!

செ.ம.தொ.இ / 226 / வரைகலை / 2026


# கல்வியில் சிறந்த தமிழ்நாடு புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 25 -**

**கல்வியில் சிறந்த தமிழ்நாடு - புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம் என்று ஐ.ஐ.டி.யில் நுழைவதற்கான முதற்படியை அரசு மற்றும் மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் வெற்றிகரமாகக் கடந்துள்ளது குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் (Tamil Nadu Model Schools): கல்வியில் சிறந்த தமிழ்நாடு புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம்!

கல்வியால் சிறக்கும் நமது அரசுப் பள்ளி மாணவர்களைச் செய்தித்தாள்களின் முதல் பக்கத்தில் இடம்பெற வைத்துப் பூரிப்படைகிறோம்.

2021-2022இல் கல்வியில் பின்தங்கிய 10 மாவட்டங்களில் தொடங்கப்பட்ட மாடல் பள்ளிகள், இன்று 38 மாவட்டங்களிலும், தலா ரூ.50 கோடி மதிப்பீட்டில் 800 மாணவர்களுக்கான உறைவிட, உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அதனால்தான், கடந்த 4 ஆண்டுகளில் அரசு மற்றும் அரசு மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 2,358 மாணவர்களும், ஆதி திராவிடர் (37) மற்றும் பழங்குடியினர் (169) பள்ளிகளைச் சேர்ந்த 206 மாணவர்களும், 93 முன்னணி உயர் கல்வி நிறுவனங்க ளில், 50 துறைகளில் மேற்படிப்பு பயிலுகின்றனர். அதில் 41 பேர் IITகளிலும், 22 பேர் முழு உதவித்தொகையுடன் வெளிநாடுகளிலும் பயில்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு ஐ.ஐ.டி.யில் நுழைவதற்கான முதற்படியை அரசு மற்றும் மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 448 மாணவர்களும் ஆதி திரா விடர் (13) மற்றும் பழங்குடியினர் (55) பள்ளிகளைச் சேர்ந்த 68 மாணவர்களும் வெற்றிகரமாகக் கடந்துள்ளனர்.

பெரும்பாலும் முதல் தலைமுறையினராகக் கல்விச் சாலைக்குள் நுழைந்த இந்த மாணவர்களின் கனவுகளை அடைவதற்குத் துணை நிற்கின்ற பெருமையோடு, இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு இன்னும் பலர் கல்வியைக் கைப்பற்றிக் கொண்டு, உன்னதமான உயரங்களை வாழ்வில் அடைந்திட வாழ்த்துகிறோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## 2026 சட்டப்பேரவைத் தேர்தல்:

# தமிழ்நாடு வருகிறார் தலைமை தேர்தல் ஆணையர்!

*சென்னை, பிப். 25-*

*தமிழ்நாட்டில் ஏப்ரல் மாதம் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான அறிவிப்பு அடுத்த மாதம் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*அரசியல் கட்சிகள் தேர்தலை சந்திக்க தீவிரமாகி வரும் நிலையில் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தேர்தலுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள தொடங்கி இருக்கிறார்கள். இதன்படி தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தலைமையில் தேர்தல் ஆணைய குழுவினர் இன்று தமிழ்நாடு வருகிறார்கள்.*

*இந்த அதிகாரிகள் இன்று முதல் 3 நாட்கள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் தங்கி இருந்து சட்டசபை தேர்தலை நடத்துவதற்கானஅனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்கிறார்கள்.*

*இந்த சுற்றுப்பயணத்தின்போது தேர்தல் ஆணைய அதிகாரிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை நடத்துகிறார்கள்.*

*தமிழ்நாடு வருகை தரும் தலைமை தேர்தல் ஆணையர் சென்னையில் மாநில அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த உள்ளார்.*

*தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட நிலையில் தேர்தல் ஆணைய அதிகாரிகள் தமிழ்நாட்டுக்கு வருகை தந்து தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை முடுக்கி விடுகிறார்கள்.*

*இது தொடர்பாக மாநில தேர்தல் அதிகாரிகள் கூறும்போது, தமிழ்நாட்டை பொறுத்தவரை எப்போதுமே அமைதியான முறையில் தேர்தல் நடைபெறுவது வழக்கம். இதன் காரணமாகத்தான் மற்ற மாநிலங்களைப் போன்று இல்லாமல் தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுகிறது. அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறோம் என்றார்.*




கன்னியாகுமரி மாவட்டம்



ரூ. 1,785 கோடியில்

முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்தல்

புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல்

மற்றும்

அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

25.2.2026 புதன்கிழமை, காலை 9.30 மணி

இடம் : நாகர்கோவில் கன்கார்டியா பள்ளி மைதானம், கன்னியாகுமரி மாவட்டம்



கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள எம்.ஆர்.ஐ.கருவி



கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நவீன காய்கறிச் சந்தை

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டு சாதனை !

நலத்திட்டங்கள்

- ரூ.4,260 கோடி
- 34 இலட்சம் பயனாளிகள்

வளர்ச்சிப் பணிகள்

- ரூ.4,119 கோடியில் 11,690 பணிகள்

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் !

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-600 009

செ.ம.தொ.இ/214/வரைகலை/2026